மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீரை நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் மற்றும் கிராமங்களுக்கும் உடனடியாக வழங்கவேண்டுமென்பதற்கு சிறப்பு திட்டம் அமைக்கப்பட்டு அது இன்று குடிநீர் வாரியத்தின் மூலமாகவும் நிறைவேற்றப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

திரு. என். கணபதி: இந்தக் குடிநீர் வாரியத்தில் ஆய்வுத் தொகையாக முதலிலே பணம் கட்டச் சொல்கிறார்கள். வசதியில்லாத பேரூராட்சி மன்றங்களும் ஊராட்சிமன்றங்களும் பொதுமக்களிடமிருந்து நிதி வாங்கி செலுத்துவதற்கு அரசு வசதி செய்து தருமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: பொதுமக்களிடமிருந்து வாங்குவதற்கும் அரசாங்கமே வசதி செய்து கொடுக்கும் என்பது இயலாத காரியம்.

*22. **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், கிருஷ்ணராயபுரம் பேரூராட்சிப் பகுதிகளுக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசிலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு, குடிநீர் வடிகால் வாரியம் கிருஷ்ணராயபுரம், பழைய ஜெயங்கொண்ட சோழபுரம் ஆகிய பேரூராட்சிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டத்தை அமுல் படுத்த வேண்டி தனது ஆணை எண். 108, தேதி 28—3—1972-ல் ஆய்வுப் பணிகளுக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ22,000-க்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. பேரூராட்சி மன்றங்கள் ஆய்வுக்கான செலவுகளை இன்னும் செலுத்தவில்லை. பேரூராட்சி மன்றங்கள் ஆய்வுக்காகும் செலவுத் தொகையை முழுவதாக செலுத்தியவுடன் ஆய்வு வேலைகள் மேற்கொள்ளப்படும்.

வைதீஸ்வரா உயர்நிலைப் பள்ளிக்கு விஞ்ஞான கூடம்

*23. **வினா—திரு. எம் சுரேந்திரன்:** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டூரில் உள்ள வைதிஸ்வரா தனியார் உயர்நிலைப்பள்ளி விஞ்ஞான கூடம் ஒன்று அமைக்க வேண்டுமென கோரி அரசிற்கு வந்த விண்ணப்பத்தின் மீது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் என்ன?